பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
24 06 2025 6 45
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டின் அனைத்து அருங்காட்சியகங்களின் விரிவான தேசிய தரவுகள் தொடர்பான இணையதளத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
- நக்சல் பாதிப்பில் இருந்து நாட்டை முழுமையாக விடுவிப்பதில் பாதுகாப்புப் படையினரின் கடின உழைப்பும், தியாகமும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
- வேலூரில் அமைக்கப்பட்டுள்ள அரசு பன்னோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனையை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நாளை திறந்து வைக்க உள்ளதாக மாநில அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.
- ஈரானும் – இஸ்ரேலும் முழுமையான சண்டை நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.
- இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற 371 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

நாடு முழுவதும் உள்ள அனைத்து அருங்காட்சியகங்களின் விரிவான தேசிய தரவுகள் குறித்த இணையதளத்தை உருவாக்க வேண்டியது அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று பிரதமர் அருங்காட்சியகம் மற்றும் நூலக சங்கத்தின் 47வது வருடாந்திர கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

உலகம் முழுவதும் உள்ள அருங்காட்சியகங்கள் மகத்தான முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதாகவும், வரலாற்றை அறிந்துகொள்ள அவை உதவுவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

அருங்காட்சிகங்களில் பொதுமக்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தவும், மக்களிடையே அவற்றின் மதிப்பை அதிகரிக்கவும், தொடர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொழில்நுட்ப பயன்பாடு அதிகரித்துள்ள தற்போதைய சூழலில் அருங்காட்சியகங்களை நிர்வகிப்பவர்கள், திறன் மேம்பாடு மற்றும் அறிவுப் பகிர்வில் கவனம் செலுத்துவதுடன், பயிற்சியும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

<<<<>>>>

நக்சல் பாதிப்பில் இருந்து நாட்டை முழுமையாக விடுவிப்பதில் பாதுகாப்புப் படையினரின் கடின உழைப்பும், தியாகமும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சத்தீஸ்கர் தலைநகர் ராய்ப்பூரில் நேற்று மத்திய பாதுகாப்புப் படை மற்றும் மாநில காவல்துறை உள்ளிட்ட பாதுகாப்பு படையினருடன் திரு அமித் ஷா கலந்துரையாடினார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பாதுகாப்புப் படையினரின் அர்ப்பணிப்புடன் கூடிய தியகத்திற்கு ஒட்டுமொத்த தேசமும் தலைவணங்குவதாக குறிப்பிட்டுள்ளார்

நக்சல் பாதிப்பில் இருந்து நாடு முழுமையாக விடுபடும்போது பாதுகாப்புப் படையினரின் தியாகம், கடின உழைப்பு, அர்ப்பணிப்பு ஆகியவை வரலாற்றில் இடம்பெறும் என்றும் திரு. அமித் ஷா புகழாரம் சூட்டியுள்ளார்.

<<<<>>>>

வேலூரில் அமைக்கப்பட்டுள்ள அரசு பன்னோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனையை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நாளை திறந்து வைக்க உள்ளதாக மாநில அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இந்த மருத்துவமனையின் இறுதிக்கட்ட பணிகளை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர். அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன அறுவை சிகிச்சை மையங்களுடன் இந்த மருத்துவமனை உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மாவட்டத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள 9 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் முதலமைச்சர் திறந்து வைக்க இருப்பதாக திரு. எ.வ. வேலு தெரிவித்தார்.

<<<<>>>>

சேலம் விமான நிலையத்திற்கு பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

சென்னை உள்ளிட்ட தென்னிந்திய மெட்ரோ நகரங்களை இணைக்கும் வகையில் தினமும் நான்கு விமான சேவைகள் இயக்கப்படுவதாக சேலம் விமான நிலைய இயக்குநர் திரு. வைதேகி நாதன் தெரிவித்தார்.

<<<<>>>>

ஈரானும் - இஸ்ரேலும் முழுமையான சண்டை நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த சண்டை நிறுத்தம் உடனடியாக அமலுக்கு வர இருப்பதாக கூறியுள்ளார்.

கத்தாரில் உள்ள அமெரிக்க விமான படைத்தளத்தின் மீது ஈரான் ஏவுகணை வீசி தாக்குதல் நடத்திய நிலையில், திரு. ட்ரம்ப் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

படிப்படியாக சண்டை நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், முதலில் ஈரான் தாக்குதலை நிறுத்தும் என்றும், அதைத் தொடர்ந்து 24 மணி நேரத்தில் இஸ்ரேலும் சண்டை நிறுத்தத்தை அமல்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் கடந்த 12 நாட்களாக நடைபெற்று வந்த ஈரான் - இஸ்ரேல் இடையேயான போர் முடிவுக்கு வர இருப்பதால் உலக நாடுகள் இதனை வரவேற்றுள்ளன.

முன்னதாக கத்தாரில் உள்ள அமெரிக்க ராணுவ தளம் மீது ஈரான் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

சில ஏவுகணைகள் இடைமறிக்கப்பட்ட போதிலும் 3 ஏவுகணைகள் இலக்கை தாக்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து கத்தாரில் உள்ள அமெரிக்கர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அமெரிக்க தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

இதேபோல் அங்குள்ள இந்தியர்களும் பாதுகாப்பாக வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு இந்திய தூதரகம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஈரான் தாக்குதல் நடத்த இருப்பதாக வெளியான தகவலையடுத்து, கத்தார் வான்பரப்பை மூடுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் தோஹா செல்லும் விமானங்கள் அனைத்தும் திருப்பி அனுப்பப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக தென்காசி மாவட்டம் குற்றாலத்தின் பிரதான அருவி, ஐந்தருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தென்னாப்பிரிக்காவின் பாதுகாப்பு அமைச்சராக **Ahngyu-**வை அந்நாட்டு அதிபர் திரு. **Lee Jay Myun** அறிவித்துள்ளார்.

<<<<>>>>

கத்தாரில் உள்ள அமெரிக்க விமான தளததில் ஈரான் தாக்குதலைத் தொடர்ந்து உலக அளவில் கச்சா எண்ணெய் விலை 5 ஆண்டுகளில் இல்லாத வகையில் பேரல் ஒன்றுக்கு 5 டாலர் குறைந்துள்ளது.

<<<<>>>>

போர் பதற்றம் நீடிப்பதன் காரணமாக மேற்காசிய நாடுகளுக்கு விமான சேவையை தற்காலிகமாக நிறுத்துவதாக ஏர் இந்தியா நிறுவனம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

போதைப் பொருள் பயன்படுத்தியதாக கூறப்படும் வழக்கில் கைது செய்யப்பட்ட நடிகர் ஸ்ரீகாந்த், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் சிறையில் அடைக்கப்பட்டார்.

<<<<>>>>

திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் அமைக்கப்பட்ட புதிய அரசு தொழிற்பயிற்சி கழகத்தில் மாணவர் சேர்க்கையை அமைச்சர் திரு. சாமிநாதன் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு ஒரு கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் திரு. மூர்த்தி, திரு. பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் வழங்கினர்.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டம் கண்ணாட்டுவிளை அரசு மேல்நிலைப் பள்ளியை மாவட்ட ஆட்சியர் திருமதி அழகுமீனா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் குடமுழுக்கு, நிபுணர் குழு ஏற்கனவே அறிவித்த நேரத்திலேயே நடைபெறும் என்றும், அதில் எந்த மாற்றமும் செய்ய வேண்டியதில்லை என்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் கடல்பாசி வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு தொழில்களுக்கான பயிற்சி பெற விரும்பும் மீனவர்கள் வரும் 30ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திரு. இளம் பகவத் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற 371 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**‘Leeds’-ல்** நடைபெற்றுவரும் இப்போட்டியின் நான்காம் நாள் ஆட்ட நேர இறுதியில் இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 21 ரன் எடுத்துள்ளது.

ஐந்தாம் நாள் ஆட்டம் இன்று தொடர்ந்து நடைபெற உள்ள நிலையில், அந்த அணி வெற்றி பெற 350 ரன்கள் தேவை.

முன்னதாக இந்திய அணி இரண்டாவது இன்னிங்சில் 364 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

கே.எல். ராகுல் 137 ரன்னும், ரிஷப் பந்த் 118 ரன்னும் எடுத்தனர்.

இந்தியா முதல் இன்னிங்சில் 471 ரன்கள் எடுத்திருந்த நிலையில், இங்கிலாந்து 465 ரன் எடுத்தது.

<<<<>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் சேப்பாக்கம் அணி 4 ரன் வித்தியாசத்தில் திருச்சி அணியை வென்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் திருப்பூர் - கோவை அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>